ආයතනයේ නම : සමාජ සේවා දෙපාර්තමේන්තුව

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා

සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119 (4) යටතේ ගරු අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ

හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම.

நிறுவனத்தின் பெயர்: சமூக சேவைகள் திணைக்களம்

பாராளுமன்றத்தின் அரச கணக்குக் குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை

தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் கௌரவ அமைச்சரின்
அவதானிப்புக்களும் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளும்
பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.

Name of the institution: Department of Social Services

Submission of Observation of Hon Minister and Steps taken with regard to the Reports tabled by the committee on public Accounts in terms of standing Order No.119 (4)

பாராளுமன்ற கூட்டத்தொடர் இல. - 183

நிறுவனத்தின் பெயர் - சமூக சேவைகள் திணைக்களம்

குழுவினால் இனம் காணப்பட்டுள்ள குறைபாடுகள்	குறைபாடுகள் / தற்போதைய நிலைமையை சரி செய்வதற்கு நிறுவனத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்
முதலாம் பகுதி	
01. நிலையான சொத்து ஆவணம் இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படவில்லை	அரச கணக்குகள் திணைக்களம் மூலம் வருடாந்தம் வெளியிடப்படும் அரச கணக்குகள் வழிகாட்டலின் பொதுவான அறிவுறுத்தல் பிரகாரம் நிலையான சொத்து ஆவணத்தை தொடர்ந்தும் பேணிச் செல்வது கட்டாயம் இல்லை என குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் CIGAS நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நிலையான சொத்துக்கள் தொடர்பான தகவல்கள் பெணப்படுகின்றன.
02. 2004.5.11 ஆம் திகதிய 171/2004 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை பிரகாரம் அரச சம்பளம் தயாரிக்கும் கணினி மென்பொருளுக்கு ஏற்புடைய முதலாம் இரண்டாம் மற்றும் மூன்றாம் கடவுச்சொற்கள் மூன்று மாதத்திற்கு ஒரு முறை மாற்றப்படாமை.	சம்பளம் தயாரித்தல் தொடர்பான கடவுச் சொற்கள் மாற்றப்படாத போதும் தற்போது 03 மாதத்திற்கு ஒருமுறை கடவுச் சொற்கள் மாற்றப்படுகிறது.
03. 2017.06.26 ஆம் திகதிய 1/2017 ஆம் இலக்க சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கையின் 13 ஆம் பந்தியின் பிரகாரம் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தலை ஒருங்கிணைப்பதற்காக பொருத்தமான உத்தியோகத்தர் ஒருவரை நியமித்து கொம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்துக்கு அறிவிக்கப்படவில்லை.	சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கையின் 13 ஆம் பந்தியின் பிரகாரம் சுற்றறிக்கை ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்காக அப்போது கணக்காளராக செயற்பட்ட திரு ஐ.எல்.சோமசிரி நியமிக்கப்பட்ட போதும் அவரது இடமாற்றத்தை தொடர்ந்து புதிய உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்படலில் தாமதம் ஏற்பட்டது. தற்போது கணக்காளராக செயற்படும் திருமுதி ஜே.எல்.அத்துகோரல நியமிக்கப்பட்டுள்ளார்.
04. 2016.03.31 ஆம் திகதிய 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை பிரகாரம் பொருள் கணிப்பீடு மேற்கொண்டு உரிய திகதியில் ஏற்புடைய அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படவில்லை .	05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை பிரகாரம் பொருள் கணிப்பீட்டுப் பணிகள் உரிய உரிய திகதியில் மேற்கொள்ளப்பட்ட போதும் அறிக்கை சமர்ப்பிப்பதில் குறைபாடு ஏற்பட்டுள்ளதுடன் தற்போது உரிய திகதியில் இருப்புக் கணிப்பீட்டை நடாத்தி ஏற்புடைய அறிக்கைகளை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
05. வருடாந்த இருப்புக் கணப்பீட்டின் போது வெளிக்கொணரப்பட்ட மேலதிகங்கள் மற்றும் குறைபாடுகள் தொடர்பான பரிந்துரைகளுடன் ஏனைய பரிந்துரைகள் உரிய காலப் பிரிவுக்குள் நடைமுறைப்படுத்தப்படவில்லை .	பொருள் கணிப்பீடுகள் மூலம் இனம் காணப்படும் மேலதிகங்களை புத்தகங்களில் உள்ளடக்குவதற்கும் குறைபாடுகள் தொடர்பான காரணங்களை வினவி எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதுடன் பின்னர் மேற்கொள்ளப்படும் பொருள் கணிப்பீட்டின் போது அது தொடர்பான பின்னாய்வை மேற்கொள்வதற்கும் ஆலாசனை வழங்கப்பட்டுள்ளது.

06. ஒதுக்கின் வாகனங்கள் தொடர்பில் நாளாந்த ஓட்ட மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.	ஒவ்வொரு மாத இறுதியிலும் அதனோடு தொடர்புடைய நாளாந்த ஓட்டக் குறிப்புகள் மற்றும் மாதாந்த பொழிப்புக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்படுவதுடன் தற்போது 2013 சனவரி மாதம் வரையான நாளாந்த ஓட்டக் குறிப்புகள் மற்றும் மாதாந்த பொழிப்புக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட்டுள்ளது.
07. வாகனம் ஒன்று இயங்காமல் 6 மாதத்திற்கு குறைவான காலத்தில் அகற்றப்படவில்லை .	54-6577 ஆம் இலக்க வேன் வண்டியை பழுதுபார்ப்பதற்கான மதிப்பீட்டைப் பெற்றுக்கொள்வதற்கு அரசின் இணை நிறுவனம் ஒன்றான வரை/ லக்திவ பொறியியல் தனியார் கம்பனிக்கு அனுப்பப்பட்டது. ஆயினும் அந்த வேன் வண்டிக்கு 12 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான தொகை செலவாவதன் காரணமாக அதற்குப் போதிய ஒதுக்கீடுகள் திணைக்களத்தில் காணப்படவில்லை. எவ்வாறாயினும் அந்த வேன் வண்டியை அவர்களுக்கு வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு மூலம் வரை/ லக்திவ பொறியியல் தனியார் கம்பனியிடம் கோரப்பட்டது. அதன் பிரகாரம் மேற்குறித்த வேன் வண்டியை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சிடம் ஒப்டைத்தல் தொடர்பான MTA 6 மற்றும் 8 மாதிரிப்படிவம் மற்றும் ஏனைய ஆவணங்கள் 2023.02.07 ஆம் திகதியிடப்பட்டு அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது.
08. ஒவ்வொரு வாகனத்துக்காகவும் லொக் குறிப்பு புத்தகங்கள் இற்றைப்படுத்தும் அடிப்படையில் பேணப்படவில்லை .	சமூக சேவைகள் திணைக்களத்துக்கு சொந்தமான ஒவ்வொரு வாகனத்துக்காகவும் லொக் குறிப்பு புத்தகங்கள் இற்றப்படுத்தப்பட்டு பேணப்பட்டு வருகிறது.
09. 2016.12.29 ஆம் திகதிய 2016/30 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நிறுவனத்துக்குரிய வாகனங்களின் எரிபொருள் விரயம் தொடர்பான பரிசோதனை மேற்கொள்ளப்படவில்லை.	2021 ஆம் ஆண்டு வரை ஓட்ட நிலைமையில் உள்ள அனைத்து வாகனங்களின் எரிபொருள் விரயம் தொடர்பான பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் 2022 ஆம் ஆண்டு எரிபொருள் நெருக்கடி காரணமாக வாகனங்கள் சிலவற்றின் எரிபொருள் விரயம் தொடர்பான பரிசோதனையை மேற்கொள்ள முடியவில்லை. எதிர்காலத்தில் அந்த வாகனங்களினதும் எரிபொருள் விரயம் தொடர்பான பரிசோதனை மேற்கொள்ளப்பட உள்ளது.
10. வங்கி இணக்க கூற்றுக்கள் மூலம் வெளிக்கொணரப்பட்ட செம்மையாக்கப்பட வேண்டி இருந்த மீதிகள் தொடர்பில் நி.ஒ.பிரகாரம் ஒரு மாத காலத்துக்குள் தீர்க்கப்படவில்லை.	அன்றைய தினத்தில் செம்மையாக்கப்பட வேண்டிக் காணப்பட்ட மீதிகள் தற்போது தீர்க்கப்பட்டுள்ளதுடன் 2023 சனவரி மாதம் தொடர்பில் வழங்கப்பட்ட போதும் கொடுப்பனவுக்காக சமர்ப்பிக்கப்படாத ஆறு மாதங்கள் கடந்த இரண்டு காசோலைகளும் ஒரு மாதம் கடந்த இனம் காணப்படாத 07 பெறுவனவுகளும் ஒரு மாதம் கடந்த இனம் காணப்படாத 01 கொடுப்பனவும் உள்ளதாகவும் அவற்றையும் எதிர்வரும் ஒரு மாத காலத்தில் தீர்த்து வைப்பதாக அறிவிக்கின்றேன்.
11. நி.ஒ. 94 (1) பிரகாரம் செலவு விடயம் ஒன்றுக்கு வழங்கப்பட்ட ஒதுக்கீட்டில் இருந்து பயன்படுத்தப்பட்ட பின்னர் எஞ்சிய ஒதுக்கீட்டு எல்லையை தாண்டி கட்டுப்பட்டிருந்தது.	ஏற்பட்ட பணவீக்க நிலைமை காரணமாக செலவு விடயங்கள் சிலவற்றின் செலவுக் கட்டுப்பாட்டை மேற்கொள்ள முடியாது போனதுடன் எதிர்காலத்தில் அந்த நிலைமையை தடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கின்றேன்.
12. ஒரு வருடத்துக்கு மேற்பட்ட காலம் முதல் இருந்து வரும் நிலுவைக் கடன் மீதி காணப்பட்டது.	2020 ஆம் ஆண்டு அரசுக்கு அறவிடப்பட வேண்டிய கடன் மீதியாக ரூ.604,851.20 காணப்பட்டதுடன் 2022.12.31 இல் அக்கடன் மீதிகள் ரூ.501,431.20 கடன் தொகை

	தீர்க்கப்பட்டுள்ளது. திரு எச்.என்.ஆர்.ஜே. புஷ்பகுமாரவின் கடன் மீதியான ரூ.103,420.00 கடன் மீதி மாத்திரம் தொடர்ந்தும் அறவிடப்படாதுள்ளது. தற்போது அக்கடன் மீதியை அறவிடல் தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அந்த நபருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
13. மீளாய்வு ஆண்டுக்காக பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய செயலாற்றுகை அறிக்கைகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்படவில்லை.	அரச நிதித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் PFD/RED/COPA/2019/01 ஆம் இலக்க மற்றும் 2020.01.30 ஆம் திகதிய கடிதம் மூலம் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையினை தயாரிப்பதற்கான மாதிரி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அந்த மாதிரிக்கு அமைவாக ஒவ்வொரு நிறுவனமும் தனக்கு கீழ் உள்ள பிரிவுகள் மற்றும் நிறுவனங்கள் மூலம் மீளாய்வு ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள், கருத்திட்டங்கள் தொடர்பான தகவல்கள் மற்றும் முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்டு தனது செயலாற்றுகை அறிக்கையினைத் தயாரித்தல் வேண்டும். இக்கால எல்லைக்குள் கொவிட் 19 தொற்று நோய் நிலைமை கடுமையாக பரவிச் சென்றதுடன் அந்த அபாயம் காரணமாக சுகாதார வழிகாட்டல்களின் கீழ் அடிக்கடி முழு நாட்டிலும் அமுலுக்கு வரும் வகையில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் அலுவலகத்தில் கடமைக்காக ஆகக் குறைந்த பணிக்குழாத்தினர் அழைக்கப்படல் மேற்கொள்ளப்பட்டது. இந்த நிலைமை காரணமாக இந்த திணைக்களத்தின் கீழ் காணப்படும் பிரிவுகள் மற்றும் நிறுவனங்கள் ஊடாக தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் பணிகளில் தாமதங்கள் ஏற்பட்டன. அவ்வாறே வருடாந்த கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கையும் மேற்குறிப்பிடப்பட்ட காரணங்களினால் தாமதித்துக் கிடைக்கப் பெற்றன. தகவல் பெற்றுக்கொள்வதில் தாமதங்கள் ஏற்பட்டாலும் தகவல்கள் கிடைக்கப் பெற்ற பின்னர் துரிதமாக மும்மொழிகளிலும் அறிக்கையினைத் தயாரித்து அச்சிட்டு பாராளுமன்றத்தில் 2021.07.15 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இத்தாமதங்களை தவிர்த்து எதிர்காலத்தில் உரியவாறு ஏற்புடைய காலத்திற்குள் செயலாற்றுகை அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக தயவுடன் அறியத் தருகின்றேன்.
14. அங்கீகரிக்கப்பட்ட எல்லையை விட மேலதிக பணிக்குழாத்தினரை ஆட்சேர்க்கப்பட்டிருந்தது.	அங்கீகரிக்கப்பட்ட எல்லையை விட பணிக்குழாத்துக்கு ஆட்சேர்க்கப்படவில்லை. தேசிய முதியோர் செயலத்தில் கடமை புரிந்த அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அடிக்கடி இந்த திணைக்களத்திற்கு இணைப்புச் செய்யப்பட்ட காரணத்தால் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அங்கீகரிக்கப்பட்ட பணிக்குழாத்தினரை விட மேலதிகமாக கடமை புரிவதுடன் இந்த பணிக்குழாத்தினரை சமூக சேவைகள் திணைக்களத்தின் பணிக்குழாத்துக்கு உள்ளடக்குவதற்கு பல்வேறு சந்தர்ப்பங்களில் முகாமைத்துவ சேவை திணைக்களத்துக்கு கடிதம் அனுப்பப்பட்டதுடன் இறுதியாக 2023.01.09 ஆம் திகதி கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

இரண்டாம் பகுதி	
15. தகவல் அறியும் சட்டத்தின் பிரகாரம் இந்த நிறுவனத்தில் தகவல் வழங்குவதற்காக குறித்த உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்படவில்லை.	எனது SSD/2/7/1/1 ஆம் இலக்க மற்றும் 2020.01.27 ஆம் திகதிய கடிதம் மூலம் தகவல் உத்தியோகத்தராக உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்) திருமதி என் ஜி பி ஜி சமரவிக்ரம நியமிக்கப்பட்டுள்ளார். இதுவரை அந்த உத்தியோகத்தர் சமூக சேவைகள் திணைக்களத்தின் தகவல் உத்தியோகத்தராக செயற்படுவதுடன் அந்த உத்தியோகத்தரின் பதவி பிரதிப் பனிப்பாளர் (நிர்வாகம்) என மாற்றமடைந்துள்ளது.
16. பொது மக்களால் கோரப்படும் தகவல்களை வழங்குதல் / வழங்காதிருத்தல் தொடர்பான விபரங்களை உள்ளடக்கிய ஆவணம் ஒன்று பேணப்படவில்லை.	பொதுமக்களால் கோரப்படும் தகவல்களை வழங்குதல் / வழங்காதிருத்தல் தொடர்பான விபரங்கள் உள்ளடங்கிய ஆவணம் ஒன்று பேணப்பட்டு வருவதுடன் அந்த ஆவணம் பேணப்படல் 2020.02.26 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
17. கோரப்படும் தகவல்களை வழங்காமை தொடர்பாக முன்வைக்கப்படும் முறைப்பாடுகளை ஆவணப்படுத்தல் மற்றும் அது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் விளக்கமளிக்கும் ஆவணங்கள் பேணப்படவில்லை.	சமூக சேவைகள் திணைக்களத்திடம் கோரப்படுகின்ற சகல தகவல்களும் வழங்கப்பட்டுள்ளதுடன் தகவல்களை வழங்காமை தொடர்பாக எந்த ஒரு முறைப்பாடும் முன்வைக்கப்படவில்லை. தற்போது முறைப்பாடுகளை ஆவணப்படுத்துவதற்கான ஓர் ஏடு பேணப்பட்டு வருகிறது.
18. நிறுவனம் தனது விடய எல்லையின் பிரகாரம் பேண்தகு நோக்கங்களை இனம் காணவில்லை.	சமூக சேவைகள் திணைக்களத்தின் இலக்கு குழுவாக, இலங்கையில் ஓரங்காட்டப்பட்ட நபர்கள் கருதப்படுகின்றார்கள். இந்த இலக்கு நோக்கிய குழுக்களை பொருளாதார மற்றும் சமூக ரீதியில் பலப்படுத்தி பொருளாதார அபிவிருத்தியின் பங்குதாரர்களாக மாற்றும் நோக்கில் அவர்களுக்கு நலன்புரி சேவைகளை வழங்குதல் திணைக்களத்தின் கடமைப் பொறுப்பு ஆகும். இந்த விடய எல்லை தொடர்பான பேண்தகு அபிவிருத்தி நோக்கங்கள் மூலம் பொது நோக்கமாக **"சமமான சமூக உரிமைகள் ஊடாக ஓரங்காட்டப்பட்ட குழுக்களைப் பலப்படுத்தல்"** என்பது இனம் காணப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் உரிய விடய எல்லையின் கீழ் பேண்தகு அபிவிருத்தி நோக்கங்கள் 4.5, 8.5 மற்றும் 10.2 ஆகிய நோக்கங்கள் சமூக சேவைகள் திணைக்களத்துக்கு ஏற்புடையதாகும் என இனம் காணப்பட்டுள்ளது.
19. இனம் காணப்பட்ட பேண்தகு இலக்குகளை அடைந்து கொள்வதனை அளவீடு செய்வதற்கான செயலாற்றுகை இலக்குகள் விதிக்கப்படவில்லை.	2020 ஆம் ஆண்டு இனம் காணப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக 08 உபாய வழிமுறைகளின் கீழ் செயலாற்றுகை குறிகாட்டி இனம் காணப்பட்டுள்ளது. அதன் கீழ் செயற்பாட்டுத் திட்டத்தின் பிரகாரம் ஏற்புடைய இலக்குகளை அடைந்து கொள்வதற்கான நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்துத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.
20. நிறுவனத்தின் பேண்தகு நோக்கங்களின் இலக்குகளை அடைந்து கொள்வது தொடர்பான குறித்த தரப்பினர்கள் இனம் காணப்படவில்லை.	இனம் காணப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு ஏற்புடைய இலக்குகளை அடைந்து கொள்வதற்காக ஏற்புடைய தரப்பினர்கள் தற்போது இனம் காணப்பட்டுள்ளார்கள்.
21. 2018 ஏப்ரல் 27ஆம் திகதிய MSD/08/65 ஆம் இலக்க சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நிறைவேற்றப்பட வேண்டிய பேண்தகு அபிவிருத்தி நடவடிக்கைகளின் ஒருங்கிணைப்புக்காக நியமிக்கப்பட வேண்டிய பிரதிநிதிகள் இருவர் தொடர்பான விபரங்கள் அமைச்சுக்கு அறிக்கையிடப்படவில்லை.	2018 ஏப்ரல் 27ஆம் திகதிய MSDW/08/65 ஆம் இலக்க சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிறைவேற்றப்பட வேண்டிய பேண்தகு அபிவிருத்தி நடவடிக்கைகளின் ஒருங்கிணைப்புக்காக உத்தியோகத்தர் ஒருவரை நியமித்து அது தொடர்பான விவரங்கள் மின்னஞ்சல் மூலம் பேண்தகு அபிவிருத்தி சபைக்கு அனுப்பப்பட்டுள்ளன.

22. மக்கள் / சேவை பெறுநர் / சாசனம் உரியவாறு தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படவில்லை.	மக்கள் / சேவை பெறுநர் சாசனம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் திணைக்களத்தில் வாராந்தம் நடத்தப்பட்ட பதவிநிலை மற்றும் பிரிவுத் தலைவர்களின் கூட்டத்தின் போது நிறுவனத்தின் பணிகளை உரியவாறு நிறைவேற்றுதல் தொடர்பில் கலந்துரையாடப்பட்ட பின்னர் அதுபற்றி பின்னாய்வு செய்தல் மேற்கொள்ளப்பட்டது.
23. நிறுவனத்தின் மக்கள் / சேவை பெறுநர் சாசனம் நடைமுறைப்படுத்தப்படல் தொடர்பில் மேற்பார்வை மற்றும் மதிப்பீட்டுக்காக நிறுவனத்தால் முறைமை ஒன்று தயாரிக்கப்படவில்லை.	மக்கள் சாசனம் பிரகாரம் இனம் காணப்பட்ட வேலை படிமுறைகளின் பிரகாரம் சேவை வழங்கும் முன்னேற்றத்தை மாதாந்தம் நடைபெறும் கூட்டம், அத்தியட்சகர் / நிலையப் பொறுப்பதிகாரி கூட்டம் மற்றும் மாவட்ட முன்னேற்ற மீளாய்வு கூட்டத்தில் கலந்துரையாடி மதிப்பீடு மேற்கொள்ளப்படுவதுடன் பிரிவுத் தலைவர் மற்றும் பதவிநிலை உத்தியோகத்தர் மூலம் அவதானிக்கப்பட்டு மேற்பார்வை மேற்கொள்ளப்படும். கருத்துக்கள் மற்றும் அபிப்பிராயப் பெட்டி ஒன்றை நிறுவனத்திற்கு முன்னால் வைப்பதன் மூலம் சேவை பெறுநர்களிடம் கருத்துக்களைப் பெறுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.
24. தயாரிக்கப்பட்ட மனிதவள திட்டம் மூலம் ஊழியர் ஒருவருக்காக ஆகக் குறைந்தது ஆண்டு ஒன்றுக்கு 12 மணித்தியால பயிற்சி விதிக்கப்படவில்லை.	2020 ஆம் ஆண்டுக்கான மனித வள அபிவிருத்தி திட்டத்தை தயாரிப்பதற்கான பயிற்சித் தேவைப்பாடுகள் தொடர்பான தகவல்களை தெரிவிப்பதற்கு வருட ஆரம்பத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆயினும் 2020 மார்ச் மாதம் முதல் கொவிட் 19 தொற்று நோய் நிலைமே காரணமாக சுகாதார வழிகாட்டல்களின் கீழ் தனிமைப்படுத்தல் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டதனால் அலுவலகத்திற்கு உத்தியோகத்தர்கள் வரவழைக்கப்படாததன் காரணமாக மனித வள அபிவிருத்தி திட்டத்தினை தயாரித்தலை உரிய காலத்தில் பூர்த்திசெய்ய முடியவில்லை. அப்போது இருந்த ஒதுக்கீடுகளின் பிரகாரம் மேற்கொள்ள முடியுமான பயிற்சிகளுக்காக மனித வள அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்பட்டது. திட்டத்தின் பிரகாரம் மனித வள அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் / பயிற்சிக்காக சுகாதார வழிகாட்டல்களுக்கு உட்பட்டு உத்தியோகத்தர்களை ஒன்று சேர்க்க முடியாது போனதன் காரணமாக நிகழ்நிலை முறையில் மேற்கொள்ள முடியுமான பயிற்சிகளை உள்ளடக்கி விட்டில் இருந்து உத்தியோகத்தர்களை தொடர்பு படுத்தி சகல பதவிகளும் உள்ளடங்கும் வகையில் நிகழ்நிலை பயிற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. அதற்காக திருத்தப்பட்ட மனித வள அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்பட்டது. அதன் பிரகாரம் வழங்கப்பட்ட ஒதுக்கீடுகள் மற்றும் நாட்டில் காணப்பட்ட கொவிட் தொற்றுநோய் நிலைமை ஆகியவற்றின் காரணமாக ஒவ்வொரு ஊழியருக்காகவும் 12 மணித்தியால பயிற்சி வழங்குதலை ஆரம்ப திட்டத்தில் உள்ளடக்க முடியாது போன போதும் அனைத்து பதவிகளும் உள்ளடங்கும் வகையில் மனித வள அபிவிருத்தி திட்டம் திருத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. பயிற்சிக்காக கிடைக்கப்பெறும் ஒதுக்கீடுகள் மற்றும் பல்வேறு சந்தர்ப்பங்களில் வெளியிடப்படும் சுற்றறிக்கைகளின் பிரகாரம் ஒவ்வொரு ஊழியருக்கும் 12 மணித்தியால பயிற்சியினை வழங்க கூடியவாறு மனித வள அபிவிருத்தி திட்டத்தை தயாரிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்வதாக தயவுடன் அறியத் தருகின்றேன்.

25. ஒட்டுமொத்த பனிக்குழாத்தினர் உடங்கிய செயலாற்றுகை ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவில்லை.	செயலாற்றுகை ஒப்பந்தம் தயாரித்தல் மற்றும் ஒப்பந்தம் மேற்கொள்ளப்படல் 2022 ஆம் ஆண்டு முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
26. மனித வள அபிவிருத்தி திட்டம் தயாரித்தல், இயலளவு மற்றும் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு நிறுவனத்திற்குள் சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவர் பெயரிடப்படவில்லை.	மனித வள அபிவிருத்தி திட்டத்தை தயாரிப்பதற்கும் இயலளவு மற்றும் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காகவும் நிறுவனத்தில் சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவரை 2022.05.06 ஆம் திகதிய கடிதம் மூலம் பெயரிட்டு உரிய விபரங்களுடன் அரச சேவைகள் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் மேலதிக (மனித வள அபிவிருத்தி) செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.
27. கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் பந்திகளில் சுட்டிக் காட்டப்பட்ட குறைபாடுகள் / தவறுகள் சரி செய்யப்படவில்லை.	கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் பந்திகள் மூலம் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் மற்றும் தவறுகளை சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு சரி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
28. வரவு செலவு சுற்றறிக்கை பிரகாரம் ஆகக் குறைந்தது மூன்று வெளியீட்டுக் குறிகாட்டிகள் இனம் காணப்பட்டு ஆவணப்படுத்தப்படவில்லை.	செயலாற்றுகை குறிகாட்டி இனம் காணப்பட்டுள்ள போதும் தேசிய வரவு செலவு சுற்றறிக்கை இலக்கம் 2/2017 இன் பிரகாரம் எதிர்காலத்தில் இந்த குறிகாட்டி பாவனை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகின்றேன்.
29. நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படும் கடமைப்பொறுப்புடன் தொடர்புடைய பிரதான மூன்று செயலாற்றுகைக் குறிக்காட்டிகள் இனம் காணப்படவில்லை. இனம் காணப்பட்ட முதலாவது செயலாற்றுகை குறிகாட்டியை அடைந்து கொள்ளுதல் 50% சதவீதத்தை விடவும் குறைவாக காணப்பட்டது. இனம் காணப்பட்ட இரண்டாவது செயலாற்றுகை குறிக்காட்டியினை அடைந்து கொள்ளுதல் 50% சதவீதத்தினை விடவும் குறைவாக காணப்பட்டது. இனம் காணப்பட்ட மூன்றாவது செயலாற்றுகை குறிகாட்டியை அடைந்து கொள்ளுதல் 50% சதவீதத்தை விடவும் குறைவாக காணப்பட்டது.	இந்த இனம் காணப்பட்ட செயலாற்றுகை குறிக்காட்டிகளை உயர்ந்தபட்சம் அடைந்து கொள்ளல் தொடர்பாக ஏற்புடைய பிரிவுகளை அறிவூட்டுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடுகின்றேன்.

அனோஜா ஹேரத்
பணிப்பாளர்
சமூக சேவைகள் திணைக்களம்

ANOJA HERATH
Director of Social Services
Department of Social Services
2nd Floor, Sethsiripaya Stage II
Battaramulla.

2022/05/31

யமுனா பெரேரா
செயலாளர்
மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு

Yamuna Perera
Secretary
Ministry of Women, Child Affairs and
Social Empowerment
1st Floor, "Sethsiripaya" - Stage II, Battaramulla